# முதல் பருவ பொதுத் தொகுத்தறித் தேர்வு - 2018

## ஒன்பதாம் வகுப்பு

நேரம்: 2.30 மணி | **தமிழ் இரண்டாம் தாள்** | மதிப்பெண்கள்: 60

**(விரிவானம், கற்கண்டு)**

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **10×1=10**


1. நான் பாடத்தைப் படித்தேன் - இத்தொடரில் உள்ள அமைப்பு
   அ) எழுவாய், செய்யப்படுபொருள், பயனிலை
   ஆ) எழுவாய் , பயனிலை, செய்யப்படுபொருள்
   இ) செய்யப்படுபொருள், பயனிலை, எழுவாய்
   ஈ) பயனிலை, செய்யப்படுபொருள், எழுவாய்
2. 'வந்தான் மன்னன்' என்பது
   அ) எழுவாய் தொடர் ஆ) வினைமுற்றுத் தொடர் இ) வேற்றுமைத் தொடர் ஈ) விளித்தொடர்
3. புத்தகத்தைக் கீழே போடாதே- இத்தொடரில் உள்ள 'போடு' என்பது
   அ) பெயரடை ஆ) கூட்டுவினை இ) துணை வினை ஈ) முதல் வினை
4. *பொருத்தமான வினையை எழுதுக:*
   கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக .......... அவன் பையன் பள்ளியிலிருந்து இன்னும் ............
   அ) வந்தான், வருகிறான் ஆ) வருவான், வரமாட்டான்
   இ) வந்தான், வருவான் ஈ) வந்து விட்டான், வரவில்லை
5. தடவரை என்பதன் இலக்கணக்குறிப்பு
   அ) பண்புத்தொகை ஆ) வேற்றுமைத் தொகை இ) உரிச்சொல் தொடர் ஈ) வினைத்தொகை
6. நிலாச்சோறு – இங்கு வல்லினம் மிகுந்தமைக்குக் காரணம்
   அ) உருவகச் சொற்களில் வல்லினம் மிகும். ஆ) திசைப் பெயர்களின் பின் வல்லினம் மிகும்
   இ) ஆகார எழுத்தின் பின் வல்லினம் மிகும் ஈ) வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும்
7. மகிழ்நன் மெல்ல வந்தான். இத்தொடரில் 'மெல்ல' என்பது
   அ) வினையடை ஆ) முதல் வினை இ) பெயரடை ஈ) துணைவினை
8. காவியா ஓவியம் வரைந்தாள் - காரண வினையாக மாற்றுக.
   அ) ஓவியம் வரைவாள் ஆ) ஓவியம் வரைவித்தாள்
   இ) ஓவியம் வரைகிறாள் ஈ) ஓவியம் வரையச் செய்தாள்
9. பெயர்ப் பயனிலைக்கு ஏற்ற தொடர் எது?
   அ) சொன்னவள் கலா ஆ) கலா சொன்னாள் இ) சொன்னவள் கலாவா? ஈ) கலாவுக்கு சொன்னாள்
10. பிழையான சொற்றொடரைச் சுட்டுக:
    அ) சென்று வந்தான் ஆ) வழுவூச் சொல் இ) மழை பெய்தது ஈ) எறும்புகள் போகின்றது

**II. சுருக்கமான விடையளிக்க:** **10×1=10**

11. உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது சான்று தருக.
12. *உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக:* நான் மழையில் நனைவது பிடிக்கும். (ஐ, கு, ஆல், இன்)
13. *கட்டளைத் தொடராக மாற்றுக :* பூக்களைப் பறிக்காதீர்கள்
14. என் ஐயத்தைக் கேள் / என் சந்தேகத்தைக் கேள் - *இவற்றுள் சரியான தொடர் எது?*
15. *பழமொழியைச் சொற்றொடரில் அமைக்க :* தண்ணீர் வெந்நீர் ஆனாலும் நெருப்பை அணைக்கும்.
16. *சந்திப்பிழை நீக்குக :* தண்ணீரைசிக்கனமாக பயன்படுத்துவேன்.
17. *பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க :*
    மார்னிங் எழுந்து, பிரஷ் பண்ணி, யூனிஃபார்ம் போட்டு ஸ்கூலுக்குப் போனாள்.
18. *வினையடையைக் கொண்டு நிரப்புக:* காலம் ........... ஓடுகிறது.
19. அனிதா பாடம் படித்தாள் - *வினை வகையை எழுதுக.* (பிறவினை / செய்வினை)
20. ஓடப் பார்த்தேன், படியுங்கள் - *இவற்றில் தனிவினை கூட்டுவினையைக் குறிப்பிடுக.*

**III. எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க:** 3×2=6

21. காரண வினையைச் சான்றுடன் விளக்குக.
22. கீழ்க்காணும் துணை வினைகளைப் பயன்படுத்திப் புதிய தொடர்களை உருவாக்குக :
    அ) வேண்டும் ஆ) பார்
23. பொருள் எழுதித் தொடரமைக்க : குளவி, குழவி
24. கேள் என்னும் வேர்ச்சொல்லை எழுவாய்த் தொடராகவும், வினாத் தொடராகவும் மாற்றுக.
25. தற்கால உரைநடையில் வல்லினம் மிகா இடங்களுக்கு இரு சான்றுகள் தருக.
26. தமிழெண்களை அரபு எண்களாக மாற்றுக : 4½=2
    அ) கூசங ஆ) அசாஎ இ) ருஉக ஈ) ச°சா0
27. இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக: 2×1=2
    அ) An early morning walk is a blessig for the whole day.
    ஆ) You have to dream before your dreams can come true.
28. குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு தருக: 4
    எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
    ஆன்ற பெருமை தரும்.
29. காட்சியைக் கண்டு அரைப்பக்க அளவில் எழுதுக: 4



30. பாடலுக்கு திரண்ட கருத்தை எழுதி நயம் பாராட்டுக: 4

விரிகின்ற நெடுவானில், கடற்பரப்பில்
விண்ணோங்கு பெருமலையில், பள்ளத்தாக்கில்
பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில்
புல்வெளியில், நல்வயலில், விலங்கில் புள்ளில்
தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்
தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே,
அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள்
அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவனே!

– ம. இலெ. தங்கப்பா

**IV. ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளிக்க:** 1×6=6

31. தண்ணீர் கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி எழுதுக.
32. இந்திய விண்வெளித் துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

**V. ஏதேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளிக்க:** 1×6=6

33. உங்களின் நண்பர் பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் கால்முளைத்த கதைகள் என்னும் நூல் குறித்த கருத்துக்களைக் கடிதமாக எழுதுக.
34. சுற்றுச்சூழலைப் பேணிக் காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுது.

**VI. குறிப்புகளைக் கொண்டு ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் கட்டுரை வரைக.** 1×6=6

35. நீரின்றி இயங்காது உலகு - நீரின் இன்றியமையாமை - நீர் நிலைகள் - நீர்ப் பற்றாக்குறை ஏற்படக்காரணம் - நீரைச் சேமித்தல் - நிலத்தடி நீர் மட்டம்
36. அறிவியல் இயந்திரங்கள் - வியத்தகு சாதனைகள் - அவசியம் - பயன்பாடு - நன்மைகள் - தீமைகள் - விழிப்புணர்வு.

-------

முதல் பருவத் தொகுத்தறித்தேர்வு - 2018, தஞ்சாவூர் மாவட்டம்.
தமிழ் இரண்டாம் தாள் - விடைக்குறிப்பு.

1) எழுவாய், செய்யப்படுபொருள், பயனிலை
2) வினைமுற்றுத் தொடர்
3) துணை வினை
4) வந்துவிட்டான், வரவில்லை
5) உரிச்சொல் தொடர்
6) ஆகார எழுத்தின் பின் மிகும்
7) வினையடை
8) ஓவியம் வரையச் செய்தாள்
9) சொன்னவள் கலா
10) எறும்புகள் பேசுகின்றது.

11) இரவு + பகல் = இரவு பகல்
12) எனக்கு ( கு )
13) பூக்களைப் பறிக்காதே.
14) என் ஐயத்தைக் கேள்
15) தண்ணீர் வெந்நீரானாலும் நெருப்பை அணைக்கும் என்பது போல தீயவர்கள் சில நேரங்களில் நன்மையைச் செய்வர்.
16) தண்ணீரைச், சிக்கனமாகப்
17) காலை, பல்துலக்கி, சீருடை, பள்ளி
18) வேகமாக
19) செய்வினை
20) ஓடப் பார்த்தேன் - தனிவினை
படியுங்கள் - கூட்டுவினை.

21) எழுவாய் தானே வினையை நிகழ்த்தாமல் வினை நிகழ்வதற்குக் காரணமாக இருப்பது காரணவினை.

22) அ. நாள்தோறும் படிக்க வேண்டும்.
ஆ. படத்தைப் பார்த்து எழுது.

23) குளவி - ஒரு வகைத் தேனி
குழவி - குழந்தை.

24) பாடம் கேட்டான், எதைக் கேட்டான்

25) எழுவாய்த் தொடரில் மிகாது - கிளி பேசும்
விளித்தொடரில் மிகாது - மகனே தா.

26) அ. 943. ஆ. 867 . இ. 521. ஈ.460.

27) அ. காலைப்பொழுதில் நடப்பது நாள்முழுதும் உற்சாகம் தரும்.

ஆ. கனவு மெய்ப்பட வேண்டும்.

28) எனைத்தானும் - நிரை,நேர்,நேர் - புளிமாங்காய்
நல்லவை - நேர், நிரை. - கூவிளம்
கேட்க - நேர், நேர். - தேமா
அனைத்தானும் - நிரை, நேர், நேர் - புளிமாங்காய்
ஆன்ற - நேர் , நேர் - தேமா
பெருமை - நிரை, நேர் - புளிமா
தரும் - நிரை - மலர்.

29) பொருத்தமான விடை இருப்பின் மதிப்பெண் வழங்கலாம்.

30) மோனை - விரிகின்ற
விண்ணோங்கு வி- மோனை

எதுகை - பொழிகின்ற
பொழிலில் ழி - எதுகை.

31, 32 ) முன்னுரை, பொருளுரை, முடிவுரை

33, 34 ) ஊர், தேதி, விளித்தல், இப்படிக்கு, உறைமேல் முகவரி.

35, 36 ) முன்னுரை, பொருளுரை, முடிவுரை.

தயாரிப்பு : எஸ். ஜெயசெல்வன்,
தி.ஆ.மே.நி.பள்ளி, திருவிடைமருதூர்.